## வைப்பு காப்பீட்டுத் திட்டம்

# பதறியடித்து




# SDIC இருக்கிறது நிம்மதியாக இருங்கள்

SDIC
Deposit Insurance
Policyowners' Protection

ஓர் உறுப்பினர் வங்கி
அல்லது நிதி நிறுவனம்
வீழ்ச்சியடைந்தால்
உங்கள் வைப்பு நிதிகள் எவ்வாறு
பாதுகாக்கப்படுகின்றன எனத்
தெரிந்துகொள்ளுங்கள்.

# SDIC என்பது என்ன?

**சிங்கப்பூர் வைப்புக் காப்பீட்டு நிறுவனம் (SDIC)** வைப்புக் காப்பீடு மற்றும் பாலிசி உரிமையாளர் பாதுகாப்புத் திட்டங்கள் சட்டத்தால் வைப்புக் காப்பீட்டை நிர்வகிக்க ஆற்றல் அளிக்கப்பட்டதாகும். சிங்கப்பூரிலுள்ள அனைத்து முழு வங்கிகளும் நிதி நிறுவனங்களும் DI திட்ட உறுப்பினர்கள் ஆகும்.

DI திட்டத்தின் கீழுள்ள உறுப்பினர்களின் முழுப் பட்டியலையும் காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

*SDIC ஆனது பாலிசி உரிமையாளர்களின் பாதுகாப்புத் (PPF) திட்டத்தை நிர்வகிக்கிறது. மேலும் தகவல்களுக்காக SDIC இன் வலைத்தளத்திற்கு வருகை புரியவும்.*

## DI திட்டம் என்றால் என்ன?

ஓர் உறுப்பினர் வீழ்ச்சி அடையும் நிகழ்வின்போது DI திட்ட உறுப்பினர்களிடம் நாம் வைத்துள்ள நிதிவைப்புகளை வைப்பு காப்பீட்டுத் (DI) திட்டம் பாதுகாக்கிறது.

## DI எவ்வாறு காப்பீடு அளிக்கிறது?

கீழ்வரும் கணக்குகளில் இடப்பட்டுள்ள சிங்கப்பூர் டாலர் வைப்புகள் அல்லது நிதிகளுக்குக் காப்பீடு அளிக்கப்படுகிறது:

- ✔ சேமிப்பு, நடப்புக் கணக்குகள்
- ✔ வாதியா கணக்குகள்
- ✔ முரபகா கணக்குகள்
- ✔ டிரஸ்ட், கிளையண்ட் கணக்கு
- ✔ துணைநிலை ஓய்வூதியத் திட்டக் (SRS) கணக்குகள்
- ✔ மசேநி முதலீட்டுத் திட்டக் (CPFIS) கணக்குகள்
- ✔ மசேநி ஓய்வூதியத் தொகை திட்டக் (CPFRS) கணக்குகள்

*அந்நியச் செலவாணி வைப்புகள், இரட்டைச் செலவாணி முதலீடுகள், கட்டமைக்கப்பட்ட வைப்புகள், பிற முதலீடு பற்றிய திட்டங்கள் ஆகியவை காப்பீடு படுவதில்லை.*

# நீங்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறீர்கள்?

உங்கள் காப்பீடு பெற்ற வைப்புகள் ஒட்டு மொத்தமாக **$100,000** வரை ஒரு வைப்பாளருக்கு ஒரு DI திட்ட உறுப்பினருக்கு எனப் பாதுகாப்பளிக்கப் படுகிறது - அதே உறுப்பினருடன் நீங்கள் எத்தனைக் கணக்குகளை வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் இப்பதுகாப்பு அளிக்கப்படுகிறது.

## வைப்பு காப்பீடு (DI) கவரேஜ்

சேமிப்புக் கணக்கு
**$30,000**
+
நிலைத்த வைப்புத் தொகை
**$80,000**
+
துணைநிலை ஓய்வூதியத் திட்டக் கணக்குகள்
**$20,000**

= மொத்தம் **$130,000**

காப்பீடு பெற்றது:
**$100,000**
காப்பீடு பெறாதது:
$30,000



## CPFIS மற்றும் CPFRS இன் கீழுள்ள நிதிகள்

கூடுதலாக, DI திட்ட உறுப்பினரின் கீழ் இடப்பட்ட உங்கள் நிதிகள் CPFIS மற்றும் CPFRS ஒட்டுமொத்தமாகவும் தனியாகவும் **$100,000** வரை காப்பீடு பெறுகின்றன.

சேமிப்புக் கணக்கு
**$30,000**
+
நிலைத்த வைப்புத் தொகை
**$90,000**

ஒட்டு மொத்தத் தொகை
= **$120,000**

ப்பீடு பெற்றது:
**$100,000**
காப்பீடு பெறாதது: $20,000

CPFIS/CPFRS கணக்கு
**$10,000**

ப்பீடு பெற்றது:
**$10,000**



# டிரஸ்ட் கணக்குகள்

டிரஸ்ட் கிளையண்ட் கணக்குகள் **$100,000** வரை ஒரு கணக்கிற்கு

| | |
|---|---|
| தந்தையின் சேமிப்புக் கணக்கு **$40,000** | காப்பீடு பெற்றது: **$40,000** |
| மகனின் சேமிப்புக் கணக்கு டிரஸ்ட்-இன் அடிப்படையில் **$120,000** | காப்பீடு பெற்றது: **$100,000**<br>காப்பீடு பெறாதது: $20,000 |
| மகளின் சேமிப்புக் கணக்கு டிரஸ்ட்-இன் அடிப்படையில் **$70,000** | காப்பீடு பெற்றது: **$70,000** |

# தனி உரிமையாளர் கணக்கு

நீங்கள் தனி உரிமையாளர் என்றால், உங்கள் தனிநபர் கணக்குகள் மற்றும் உங்கள் தனி உரிமையாளர் வர்த்தகக் கணக்குகள் ஒன்றாக இணைக்கப்பட்டு மொத்தத் தொகை **$100,000** க்குக் காப்பீடு அளிக்கப்படுகிறது.

| தனிநபர் கணக்கு: | வணிகக் கணக்கு: | ஒட்டு மொத்தம்: |
|---|---|---|
| **$45,000+** | **$65,000=** | **$110,000** |

## காப்பீடு பெற்றது:

**$100,000**

காப்பீடு பெறாதது: $10,000

*அனைத்து மதிப்புகளும் சிங்கப்பூர் டாலரில் கொடுக்கப்பட்டுள்ளன.*

# இணைக் கணக்குகள்

இணைக் கணக்கின் ஒவ்வொரு இணைக் கணக்கு வைத்திருப்பவரின் பங்கும் அவரது பெயரிலுள்ள பிற வைப்பு நிதிகளுடன் சேர்க்கப்படும். வைப்புநிதிகளின் ஒட்டுமொத்தத் தொகை **$100,000** வரை காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெறுகிறது.

DI திட்டமானது, உறுப்பினரின் பதிவுகள் வெறுவிதமாகக் காட்டாத வரையில், ஒவ்வொரு இணைக் கணக்கு வைத்திருப்பவரின் பங்கும் இணைக் கணக்கில் சமமான பங்கைப் பெறுகிறது.

## இணைக் கணக்கின் மொத்தத் தொகை
## $160,000

**$80,000**
\+
வேறு கணக்குகள் இல்லை
**= $80,000**

காப்பீடு பெற்ற தொகை
**$80,000**

**$80,000**
\+
சேமிப்புக் கணக்கு: $50,000
**= $130,000**

காப்பீடு பெற்ற தொகை
**$100,000**
காப்பீடு பெறாத தொகை: $30,000

*அனைத்து மதிப்புகளும் சிங்கப்பூர் டாலரில் கொடுக்கப்பட்டுள்ளன*

**பதற்றமடைய வேண்டாம்**
**தானியங்கியே நீங்கள்**
**பாதுகாப்பைப் பெறலாம்.**

எந்தப் படிவத்தையும் நிரப்பவோ அல்லது பிரிமியம் செலுத்தவோ தேவையில்லை. உறுப்பினர் வங்கி அல்லது நிதி நிறுவனத்துடன் உள்ள உங்கள் தனிநபர் விவரங்கள் புதுப்பிக்கப்பட்டவை என்பதை மட்டும் உறுதிப்படுத்தவும்.

**வெளியேறு**

# SDIC இருக்கிறது நிம்மதியாக இருங்கள்

ஓர் உறுப்பினர் வங்கி அல்லது நிதி நிறுவனம் வீழ்ச்சியடைந்தால் உங்களுக்கு எவ்வாறு இழப்பீடு செய்யப்படுகிறது என்பதை அறிவதற்கு பிரபல ஊடகங்களில் செய்திகளைத் தேடிப் பாருங்கள்.

## மேலும் காண்க

மேலும் தகவல்களை அறிய **www.sdic.org.sg** வைப்புக் காப்பீடு திட்டத் தளத்திற்கு வருகை தாருங்கள்.


**infosdic@sdic.org.sg**
**www.facebook.com/sdicsg**